# நிசி

# நிஸ்ஸி

# Nissi

JEETH Ministry

நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே **அன்பு;** நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ளவேண்டிய கற்பனை இதுவே.

II யோவான் 1:6



தனிச்சுற்றுக்கு மட்டும்

நிசி மாத இதழ் ஏப்ரல் - 2020 மலர் - 3 இதழ் 7

# உள்ளத் தென்றல்



ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் நம்மைக் கொண்டு தேசத்தில் தேவன் செய்து வரும் கிருயைகளுக்காக தேவனை துதிப்போம்.

ஊழியத்தின் எல்லைகளை தேவன் விரிவடைய செய்திருக்கிறார். ஜம்மு காஷ்மீரில் உள்ள பீஸ்னா பணித்தளத்தில் அருகாமையில் பரிபிரம்மன் என்கிற இடத்திலும் ஆர்.எஸ்.புரா என்கிற இடத்திலும் எல்லையை விரிவாக்கியிருக்கிறார். உத்திரகாண்ட் கன்கல் பணித்தளத்திலிருந்து நமது மிஷனெரி ஜெபஸ்டின் அவர்கள் அங்கே இருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள மானக்பூர் என்கிற கிராமத்தில் ஊழியம் செய்து, இப்போது அங்குள்ள விசுவாசி பாபுராம் வீட்டில் வைத்து ஆராதனை நடத்தி கொண்டிருக்கிறார்கள். இப்போது சுவிஷேச விரோத அமைப்பை சார்ந்தவர்கள் அவரை தாக்குவதற்கு திட்டமிட்டுள்ளார்கள். அவர்களுடைய கரத்திற்கு தேவன் விலக்கி பாதுகாக்கும்படியாக ஜெபிப்போம். தேவன் பெரியவர்

எங்களுக்காகவும் ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபித்துக்கொள்கிறோம். ஆமென்.



கர்த்தர் நடத்தும் வழியில்

சகோ து. சாம் குமார்

# அன்பு...

ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனும் என்று அழைக்கப்பட்ட கர்த்தர் யாக்கோபுக்கு பிற்பாடு தனி நபரோடு சேர்த்து அழைக்கப்படவில்லை. மாறாக பன்னிரண்டு கோத்திரங்களுக்கு சேர்த்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்று அழைக்கப்பட்டார். யாத்:32:27

பன்னிரண்டு கோத்திரங்கள் உருவான பிற்பாடுதான் அவர்களுக்காக அவர்களே சண்டையிட வேண்டிய அவசியம் வந்தது. அதற்கு முன்னால் ஆபிரகாமுக்கானாலும், ஈசாக்குக்கானாலும், யாக்கோபுக்கானாலும் இவர்களுக்காக கர்த்தரே முன்னின்று யுத்தம் செய்தார்.

ஆனால் பன்னிரண்டு கோத்திரம் உண்டான பின்பு அவர்களே அவர்களுக்காக சண்டையிட காரணம், அன்பு. ஆம், நாம் கூட நம்முடைய பிள்ளைகள் வளரும் வரை அவர்களை குளிப்பாட்டுவது, உடை உடுத்துவிப்பது போன்ற காரியங்களை நாம் அவர்களுக்கு செய்வோம். ஆனால் பிள்ளை வளர்ந்த பின்பும் பெற்றோருடைய உதவி தேவைப்பட்டால் நாம் பிள்ளையை நன்றாக வளர்க்க வில்லை என்று அர்த்தம்.

நாம் நமது பிள்ளைகள் மேல் உண்மையான அன்பு வைத்திருந்து அவர்கள் வேலையை அவர்களே செய்ய பழக்குவிக்க வேண்டும்.அப்படி செய்வது தான் உண்மையான அன்பு. தேவனுடைய அன்பின் மிகுதியால் இஸ்ரவேல் ஜனங்களை சகல காரியத்திலும் பழக்குவிக்க துவங்கினார். எல்லோரையும் எடுத்து பயன்படுத்தினார். இது தான் உண்மையான அன்பு.

**பெண்கள் பகுதி:**

# என் பிரியமே

உன்னதப்பாட்டு புஸ்தகத்தில் நேசர் (மணவாளன்) மணவாட்டியை (மனைவியை) பல காரணப் பெயர்களையிட்டு அழைக்கிறார்.

உன் 1:9 என் பிரியமே

உன் 1:15 நீ ரூபவதி

உன் 2:14 என் புறாவே

உன் 4:8 என் மணவாளியே

உன் 4:9 என் சகோதரியே

உன் 5:2 என் உத்தமியே என்றெல்லாம் புகழுகிறார்.

உன்னதப் 4ம் அதிகாரத்தில் மணவாளனாகிய இயேசு மணவாட்டியின் அழகையும், ஊழியத்தையும் புகழ்ந்துரைப்பதைக் காணலாம். அகாஸ்வேரு ராஜா சகல கன்னிப் பெண்களிலும் எஸ்தரை ரூபவதியாகக் கண்டார். ராஜா அவளை பட்டத்து ஸ்திரியாகவும் தெரிந்து கொண்டார். இந்த அழகு சரீர அழகு. ஆனால் மணவாளனாகிய இயேசு விரும்பும் அழகு சரீர அழகல்ல; ஆவிக்குரிய அழகு.

ஆவிக்குரிய ஜீவியத்தை காப்பாற்றி முன் மாதிரியாக ஜீவிப்பது அழகு. மணவாளனாகிய இயேசுவும் தம்மைக் குறித்து சொல்லும் போது தேவனுக்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னை தனியேயிருக்கவிடவில்லை என்கிறார். (யோவான் 8:29b) படி 13:16ல் இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று எபிரேய நிருபக்காரரர் எழுதுகிறார். ஏழைகளுக்கு இரங்குவதும், திக்கற்ற பிள்ளைகள், விதவைகள், கைவிடப்பட்டவர்கள், தள்ளப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு உதவுவோம். ஊழியங்களைத் தாங்குவோம். கர்த்தர் உங்கள் மேல் பிரியமாயிருப்பார். தனியேயிருக்கவும் விடமாட்டார். என் பிரியமே என்ற ஆசீர்வாதமும் பாசமுள்ள வார்த்தையினால் நம்மையும் அழைப்பாராக!

என் பிரியமே!!!

**சிறுவர் பகுதி:**

# என்னால் முடியும்

ஹாய் குட்டீஸ்! நலமா? உங்களின் நலம் சுகம் நன்மை இவற்றை விரும்பி ஜெபித்து வாழ்த்துகிறேன்.வாழ்வில் வரும் தேர்வுகள் வெற்றிகள் முன்னேற்றத்திற்கான வாய்ப்புப் படிகள். சரி! கதைக்குச் செல்லலாமா?

பன்னிரண்டு வயது சிறுவன், அவனை போலியோ தாக்கி நோயின் உச்சிக்கு சென்று விட்டான். சிகிச்சை அளித்து வந்த மருத்துவர் முடியாது என கைவிரித்து, இந்த இரவு முடியும் முன் மடிந்து போவான் என்றார். இதைக் கேட்ட அம்மாவால் தாங்க முடியவில்லை அழுதார்.அழுது கொண்டே இருந்தார்.அதைக் கண்ட சிறுவன் இந்த இரவு கடந்து விட்டால் என் அம்மாவின் அழுகை குறையுமே என நம்பிக்கையோடு இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்தான்.அழுது கொண்டிருந்த அம்மா அயர்ந்து தூங்கிவிட்டார்.அதிகாலை அம்மா நான் சாகவில்லை என எழுப்பிய மகனை அள்ளி அணைத்த அம்மாவின் மகிழ்ச்சிக்கு அளவில்லை.இதைக் கண்ட சிறுவன் நினைத்தான்.தினமும் அம்மாவை மகிழ்விக்க ஒவ்வொரு இரவையும் கடக்க வேண்டும்.விடியற்காலை தோறும் அம்மாவை எழுப்ப வேண்டும்.ஒவ்வொரு இரவும் மருத்துவரின் சொல்லைப் பொய்யாக்கி 75வயது வரை வாழ்ந்து மரித்த அந்த மனிதன் தான் மனநிலைச் சிகிச்சையில் பல உத்திகளை அறிமுகம் செய்த பல உளவியல் புத்தகங்களை எழுதிய பிரபல "மில்டன் எரிக்ஸன்".

**ஜெபம்**: ஆண்டவரே என்னைப் பலப்படுத்தும்.நீர் என்னோடு இருப்பதால் எல்லாம் முடியும் என்ற மன வலிமையோடு முன்னேறி பிறரை மகிழ்ச்சியாய் வைத்து நானும் சாதனைபுரிய எனக்கு உதவிச் செய்யும்.இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## எங்களது ஊழிய பிரதிநிதிகள்

| | |
|---|---|
| **மும்பை ஊழியர் R. ஜெபஸ்டின்** | **- 80805 97555.** |
| **சென்னை ஊழியர்கள்** | |
| **ஆபிரகாம், சென்னை** | **- 63801 07276** |
| **தனசிங், தாம்பரம்** | **- 80128 63939** |
| **தங்கத்துரை, தாம்பரம்** | **- 98842 59928** |
| **எபனேசர் முத்துக்கண், கூடுவாஞ்சேரி** | **- 97512 63571** |
| **திருநெல்வேலி ஊழியர் A. எட்வின்** | **- 86105 88124** |
| **கோயம்புத்தூர் ஊழியர் எப்ராயிம்** | **- 70087 53882** |
| **திருப்பூர் ஊழியர் P. வில்சன் தனராஜ்** | **- 90801 44824** |
| **பெங்களூரு ஊழியர் சாலமோன்** | **- 85530 48700** |

# வாலிபர் பகுதி

# காத்துக்கொள்ள

நீதி 4:23 எல்லா காவலோடும் உன் இருதயத்தை காத்துக்கொள்

எனக்கு அன்பான வாலிபர்களே நீங்கள் உங்கள் இருதயத்தை காத்துக் கொள்ள வேண்டும். சங் 119:9 வசனத்தின்படி காத்துக்கொள். வாலிபம் ரொம்ப முக்கியமானது. உன்னால் எதையும் செய்ய முடியும், உன்னால் பரிசுத்தமாக வாழ முடியும், ஜெயிக்க முடியும், சாதிக்க முடியும். எப்படி தெரியுமா உன்னை நீ காத்துக் கொள்ளும் போது. இயேசு உன் உள்ளத்தில் வந்தால் நீ சாதிப்பாய். நீதி :23:26 என் மகனே உன் இருதயத்தை எனக்கு தா. உன் இருதயத்தை இயேசுவுக்கு கொடு. அவர் உன்னை உயர்த்துவார். அவர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேலாவாய். இன்றைக்கு அநேக வாலிபர்கள் தங்கள் இருதயத்தை மனிதனுக்கு கொடுக்கிறார்கள். கண்ணியிலும், வேதனையிலும் சிக்கி இருக்கிறார்கள்.T.V, செல்போன்களில் நீ அடிக்கடி பார்க்கிற காரியங்கள் சந்தோஷமாய் இருக்கலாம். ஆனால் அது நிரந்தரம் அல்ல. பரலோகம் ஒன்று உண்டு. நீ அதை பார்க்க வேண்டும். வாலிபர்கள் தரிசனம் அடைவார்கள் அப் 2:17. தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள், அவைகளை பெற்றுக்கொள், பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள். நீ ஆளப்பிறந்தவன் என்பதை மறந்து விடாதே ஆமென்.


# உபவாச ஜெபம்

நாள்: **பிரதி மாதம் 3வது சனிக்கிழமை**

நேரம்: **காலை 10.00 முதல் 2.00 மணி வரை**

இடம்: **ரோஜா இல்லம், புலவன் குடியிருப்பு**

**(பஸ்டாண்டு அருகில்)**

குடும்பத்துடன் கலந்து கொண்டு கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

# ஊழியப் பதிர்வு:

## பஞ்சாப் மாநிலம் தூரி பணித்தளம்

### ஸ்டீபன் குடும்பம்

**ஜெபியுங்கள்**

1. கிளாஸோ என்கிற பெண்ணுக்கு ரத்தத்தில் யூரியா அதிக அளவில் உள்ளன. அதனால் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. தேவன் சுகம் கொடுக்க ஜெபிப்போம்.
2. ஸ்மித் என்கிற 15 வயது சிறுவன் போதைஊசியை அதிக அளவில் பயன்படுத்தியதால் சரீரம் அதிகமாக பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தான். மருத்துவர்கள் கைவிட்டு விட்டனர். பிறருக்கு போதைப்பொருட்களை வாங்கி கொடுத்து கொடுத்து அதை பழக்கமாக்கி கொண்டான். வீட்டில் இருந்து பொருட்களை எடுத்து விற்று போதைப்பொருட்களை வாங்கி பயன்படுத்தி வந்தான். பெற்றோர் எவ்வளவோ முயன்றும் அவனை கட்டுப்படுத்த முடியவில்லை. அடித்தும் கையை முடித்தும் அவன் திருந்தவில்லை. தற்போது சபைக்கு அழைத்து வந்தார்கள். ஜெபித்து வருகிறோம்.இதற்காக ஜெபிப்போம்.
3. மோனு என்கிற வாலிபனுக்கு கண்களில் சிறு வயதில் அடிப்பட்டது தற்போது பார்வை குறைபாடு ஆகிவிட்டது. மருத்துவர்கள் சரிபண்ண முடியாது என்று கூறிவிட்டார்கள். தேவன் சுகம் கொடுக்க ஜெபிப்போம்.
4. பாஷாபூர் கிராமத்தில் மூன்று குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து வருகிறார்கள். இன்னும் அநேக குடும்பங்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## அமிர்தசரஸ் பணித்தளம்:

### சகோ. கிறிஸ்டோபர் குடும்பம்

**துதி குறிப்பு**

1. மோனு என்ற சகோதரருக்கு விபத்தில் தலை இரண்டாக பிளந்து விட்டது.நாம் எல்லோரும் இணைந்து ஜெபித்தோம் தேவன் பரிபூரண சுகம் கொடுத்தார்.இப்பொழுது ஆலயத்திற்கு வருகிறார்.இதற்காக தேவனை துதியுங்கள்.
2. ரஞ்சித் என்ற சகோதரன் புதிதாக ஆலயத்திற்கு வருகிறார். இவருக்கு இருதய பலவீனத்தில் அதிக வேதனைப் பட்டார். எல்லாரும் இணைந்து

ஜெபித்தோம்.இவர் தேவனுடைய வசனத்தை கேட்டுக் கொண்டிருக்கும் போதே தேவன் சுகம் கொடுத்தார் துதியுங்கள்.

3. ரமேஷ் என்ற சகோதரருக்கு இரண்டு கிட்னியும் செயல் இழந்து காணப்பட்டார் எல்லாரும் இணைந்து ஜெபித்தோம். தேவன் பரிபூரண சுகம் கொடுத்தார் துதியுங்கள்.
4. கோட்லி என்ற கிராமத்தில் மார்ச் 6 ம் தேதி அன்று சுவிஷேச கூட்டம் நடத்தினோம். அனேக தடைகளின் மத்தியில் தேவன் கிருபையாக நடத்தினார். அநேகர் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். அநேகர் வியாதியினின்று சுகம் பெற்றார்கள். இதற்காக தேவனை துதியுங்கள்.

**ஜெப குறிப்பு**

1. இம்மானுவேல் என்ற ரிங்கு சகோதரருக்கு இருதய பலவீனம் இருக்கிறது இவர் அதிகமாக மதுவுக்கு அடிமையாகியிருக்கிறார். இதிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.
2. கோமல் என்ற சகோதரிக்கு இரத்தம் ஓட்டம் இல்லாமல் ஒரு கை, கால் செயல் இழந்து காணப்படுகிறது. இவர் விசுவாசத்தில் பலப்படவும். இவர் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.
3. சோனு என்ற சகோதரருக்கு அதிகமாக போதை அருந்தினதினால் சரீரத்தில் எல்லா உறுப்புகளும் கெட்டுப் போய் மரணத் தருவாயில் உள்ளார். இவருக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.தேவன் இவருக்கு மறு ஜீவன் கொடுப்பதற்காகவும், இவர் மனந்திரும்புவதற்காகவும் இவரது குடும்பம் ஆசீர்வதிக்கப்பட இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.
4. ரமண் என்ற சகோதரி புதிதாய் ஆலயத்திற்கு வருகிறார்கள்.இவருக்கு திருமணம் ஆகி எட்டு வருடம் ஆகிறது குழந்தை இல்லை. இவருக்கு விரைவில் கர்ப்பத்தின் கனி கிடைக்க ஜெபிப்போம்.
5. மின்டா என்ற சகோதரன் ஆலயத்திற்கு வந்தவர் இப்போது பின்மாறிவிட்டார். இவர் போதைக்கு அடிமையாகி விட்டார். T.P வியாதியில் வேதனைப் படுகிறார். இவர் இரட்சிக்கப்படவும் வியாதியினின்று சுகம் பெற ஜெபிப்போம்.

6. ஜண்டேர்,பிருவிரா கிராமத்தில் கடந்த மாதம் நடத்த வேண்டிய சுவிஷேச கூட்டமானது கொரோனா வைரஸ் காரணத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.அதை இந்த மாதம் நடத்த திட்டமிட்டுள்ளோம்.எந்த தடையும் இன்றி நடை பெற ஜெபிப்போம்.

## ஜண்டேர் பணித்தளம் :

### சகோ. தாமஸ்மஷி குடும்பம்

**துதி குறிப்பு**

1. ஜண்டேர் ஆலயத்தில் ஐந்து பேர் புதிதாக ஞானஸ்நானம் எடுக்க ஆயத்தமாக உள்ளனர்.கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.
2. ஜண்டேர் ஆலயத்தில் புதிதாக ஜெபக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**ஜெப குறிப்பு**

1. ஜண்டேர் ஆலயத்தில் உள்ள விசுவாசி மஜோர் சிங் என்ற சகோதரர் போதைக்கு அடிமையாகி உள்ளார்.இவர் போதையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.
2. அமிர்க் சிங் என்ற சகோதரர் ஊழியம் செய்து வருகிறார் தேவன் இவரை ஊழியத்தில் வல்லமையாய் எடுத்து பயன்படுத்த ஜெபிப்போம்.
3. கமல்பூர் என்ற கிராமத்தில் இரண்டு குடும்பங்கள் உள்ளன. அங்கு சபை நடத்துவதற்கு வாடகை வீடு ஒன்று கிடைக்க ஜெபிப்போம்.

## உத்திரகாண்ட் மாநிலம்

## கன்கல் பணித்தளம்

### சகோ. ஜெபஸ்டின் குடும்பம்

**ஜெப குறிப்பு**

1) மகேந்திரனின் மனைவி இரட்சிக்கப்பட ஜெபிப்போம். அவரின் மகள் குறைந்த பிரசவத்தில் பிறந்ததால் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது அதுக்காகவும் ஜெபிப்போம்.
2) ரேனு சகோதரின் கணவர் இன்னோரு பெண்ணிடம் தவறான தொடர்பு வைத்துள்ளதால் வீட்டுக்கு சரியாக வரமாட்டார். பிள்ளைகளிடம் பாசம் காட்டுவதில்லை இவர்களுக்காக ஜெபிப்போம். இவர் மனந்திரும்ப
3) பாலா என்ற சகோதரி புதிதாக வருகிறார் இவருக்கு சுகர் வியாதி அதிகமாக உள்ளதால் பல பலவீனங்களால் கஷ்டப்பட்டு வருகிறார்கள்

இவர் சுகம் பெற்று கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

4) கன்கல் சபைக்காகவும் – மானக்பூர் சபைக்காகவும் தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்

## மத்திய பிரதேசம் மாநிலம்.

## பிரான்பூர் பணித்தளம்,

### சகோ. ஹோக்ரியா குடும்பம்

**ஜெபியுங்கள்**

1. நைனா பாபா அவர்களுக்கு ஐம்பது வயதாகிறது. தற்போது சில நாட்களாக நடக்க முடியாமல் இருக்கிறார். தேவன் சுகம் கொடுக்க ஜெபிப்போம்.
2. கோமல் என்கிற முப்பது வயதுள்ள இவர் மூலை வளர்ச்சி குறைந்தவராக இருக்கிறார். தேவன் சுகம் கொடுக்க ஜெபிப்போம்.
3. நாஸ்ரபாத் சபையார் ஆலயம் கட்ட ஆயத்தமாகி வருகிறார்கள். எந்த ஒரு தடையும் வராதபடி ஜெபிப்போம்.
4. வினோத் என்கிற சகோதரர் புதிதாக சபைக்கு வந்து கொண்டு இருக்கிறார். விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.
5. அனிதா என்கிற சகோதரிக்கு கைகால்கள் வலியினால் கஸ்டபடுகிறார். தேவன் சுகம் கொடுக்க ஜெபிப்போம்.
6. ஜான்ஜோர் என்கிற கிராமத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்றனர். சிலர் இயேசுவை விசுவாசித்து வருகிறார்கள். எதிர்ப்புகளும் இங்கே இருக்கிறது. இந்த கிராமம் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

---

# பொது ஜெப குறிப்பு

1. வருகிற ஜூன் மாதம் 11,12,13,14,ஆகிய நான்கு நாட்கள் ஜீத் மினிஸ்ட்ரி ஊழியர்களுக்கான சிறப்பு முகாம் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் வைத்து நடைபெற இருக்கிறது இதற்கான அனைத்து தேவைகளும் சந்திக்கப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள்.
2. உலகத்தையே ஆட்டிப் படைக்கிற கோரானா வைரஸ் இந்தியாவில் அதிகமாக பரவாமலிருக்கவும், இந்திய பொருளாதாரம் சீர்குலையாமலிருக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# சிலுவை வடிவ கேள்வி?

**ஏப்ரல் மாத கேள்விகள்:**



1) நீ இப்படி முகங்குப்புற விழுந்து கிடக்கிறது என்ன என்று கேட்டது யார்?

2) நீதியின் பலிகளைச்செலுத்தி யார் மேல் நம்பிக்கையாயிருக்க வேண்டும்?

- ❖ சரியான விடையை எழுதி அனுப்புவர்களுக்கு பரிசு உங்கள் இல்லம் தேடி வரும்.
- ❖ விடைகளை இருப்பிடத்தோடு கடிதம் எழுதி உங்கள் முழு விலாசத்தோடு எங்கள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பவும்.
- ❖ மூன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான பதிலை எழுதி இருந்தால் சீட்டு போடுதல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- ❖ விடைகளை 25-04-2020 க்குள் அனுப்பி வையுங்கள்.
- ❖ விடைகளை இப்பொழுது whatsapp's மூலமாகவும் அனுப்பலாம் அனுப்ப வேண்டிய எண் 94438 93909

**சென்ற இதழின் விடைகள்:**

1. பலிபீடத்தின் யாத் 29:16
2. பலிபீடம் 1 இரா 13:5

**ஜெப உதவிக்கு தொடர்பு கொள்ளவும்**

**86105 88124**



**கடந்த இதழில் பரிசு பெற்றவர்கள்**

1. ஜெசுவதி Tr - சிவந்திபுரம்
2. மங்களம் தமயந்தி - திருவரங்கப்பட்டி
3. ஜெபஸ்டின் - சென்னை

# பணித்தள ஊழிய காட்சிகள்



உத்திரகாண்ட்
மாநிலம் கன்கல்
பணித்தளத்தின்
9வது
ஆண்டு சபை
துவக்கவிழா

பஞ்சாப் மாநிலம்
கோட்லி
கிராமத்தில்
நடைபெற்ற
சுவிசேஷ கூட்டம்





மும்பையில்
நடைபெற்ற
பன்னிரெண்டு
மணி நேர உபவாச
ஜெபம்

***Printed Matter***

*If Undelivered Please return to*

98, Middle Street,
Poothatankudiyiruppu,
Thiruvithanpulli (P.O)
Tirunelveli - 627414
Cell : 04634 263346,
9344446959

To.

Owned & Published by Bro.Sam Kumar from 98, Middle Street, Poothatankudiyiruppu, Thiruvithanpulli (P.O) Tirunelveli - 627414and Printed by P. Charles Palwin at G.P.R. Offset Printers, 159/23/1, Kuruchi Road, Melakulavanigarpuram, Melapalayam, Tirunelveli - 627 005.
Editor : bro. D. Thomas

G.P.R Printers 9443453271